01.12.2017

தினமலர்

## மாவட்டத்தில், 2 நாட்களுக்கு மழை நீடிக்கும்! பருவமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி



திருப்பூர்:திருப்பூர் மாவட்டத்தில், வட கிழக்கு பருவ மழை இரண்டு நாட்களுக்கு, நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் நடப்பாண்டு, தென்மேற்கு பருவமழை, இயல்பை விட கூடுதலாக பெய்தது. இதனால், இரண்டாண்டு நிலவிய வறட்சி நீங்கி, பசுமை திரும்பியது. வேளாண் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டினர்.

மாவட்டத்தின் ஆண்டு மழை பொழிவு சராசரி, 602.45 மி.மீ., என்ற நிலையில், இந்தாண்டு அக்., மாதம் வரை, மாவட்டத்தில், 550.63 மி.மீ., மழை பெய்தது. கடந்த நவ., மாதம், காங்கயத்தில், 110.70 மி.மீ.,; தாராபுரத்தில், 105.50; மூலனூரில், 92; பல்லடத்தில், 70; உடுமலையில், 71; அவிநாசியில், 48; திருப்பூரில் , 24 மி.மீ., மழை பெய்தது.கடந்த மாத, மாவட்ட சராசரியாக, 74.46 மி.மீ., மழை பதிவானது.

அவ்வகையில், இந்தாண்டு, ஒரு மாதத்துக்கு முன்பே, ஆண்டு சராசரியை தாண்டி, மழை பெய்துள்ளது.

இச்சூழலில், இடைவெளிக்கு பின், வடகிழக்கு பருவமழை தற்போது மீண்டும் பெய்து

வருகிறது. நேற்று அதிகாலையில் இருந்தே, திருப்பூர், காங்கயம், பல்லடம், வெள்ளக்கோவில், தாராபுரம், உடுமலை, அவிநாசி என, மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில், மழை பெய்துள்ளது. மழை இல்லாத நேரங்களில், வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.திருப்பூரில் நேற்று காலை முதலே, விட்டுவிட்டு மழை பெய்து கொண்டிருந்தது. நேற்று மாலையில் பெய்த மழையால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது.

தற்போதைய மழை, விவசாயிகளையும், பொதுமக்களையும் மகிழ்ச்சியடைய செய்துள்ளது. மழை காரணமாக, விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி, குட்டைகளுக்கு நீர் வரத்து காணப்படுகிறது. திருப்பூர் மாவட்டத்தில், இரண்டு நாட்களுக்கு கனமழை இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவை வேளாண் பல்கலை கால நிலை ஆய்வு மைய தலைவர் பன்னீர் செல்வம் கூறியதாவது:புயல் தாக்கம் காரணமாக, நேற்று துவங்கிய மழை, இரு நாட்களுக்கு நீடிக்கும். சராசரியாக, 50 மி.மீ., வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது.வானம் மேக மூட்டத்துடனும், மிதமான, ஒருசில இடங்களில் கன மழை பெய்யும். காற்றின் வேகம், 15 கி.மீ., வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது. தொடர் மழை காரணமாக, இரவு நேர வெப்ப நிலை, 20 டிகிரி செல்சியல் என்ற அளவில் இருக்கும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## கொடைக்கானல், பழநி பகுதியில் கனமழை : சண்முகநதியில் வெள்ளப்பெருக்கு



பழநி: கொடைக்கானல், பழநி பகுதியில் தொடரும் மழையால் அணைகளுக்கு வினாடிக்கு 400 கனஅடி முதல் 800 கனஅடி தண்ணீர் வருகிறது. வரதமாநதி அணை நான்கு நாட்களாக நிரம்பிவழிவதுடன், சண்முக நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த சிலநாட்களாக பழநி, கொடைக்கானல் பகுதியில் விடிய, விடிய கனமழை பெய்தது. இதனால் பழநி சுற்று வட்டார பகுதிகளின் குடிநீர், விவசாய பணிகளுக்கு ஆதாரமான குதிரையாறு, பாலாறு - -பொருந்தலாறு என மூன்று அணைகளுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. மழையால் வரதமாநதி அணை 4 நாட்களாக நிரம்பி வழிகிறது. இதன்மூலம் பயன்பெறும் 18 குளங்களில் 16 ஏற்கனவே நிரம்பி விட்டன. தற்போது 750 கனஅடி தண்ணீர் வெளியேறுவதால், மீதியுள்ள கலிக்க நாயக்கன்பட்டி, தட்டான்குளம் ஆகியவையும் இன்று நிரம்பிவிடும, என எதிர்பார்க்கப்படுகிறது.

சண்முகநதியில் வெள்ளப்பெருக்கு : பழநி நகர், கிராமப்புற குடிநீர் ஆதாரமான பாலாறு- - பொருந்தலாறு அணைக்கு அதிகபட்சமாக வினாடிக்கு 800 அடி தண்ணீர் வருகிறது.
அதனை அப்படியே குடிநீர் மற்றும் விவசாயத் தேவைக்காக சண்முகநதி வழியாக மானூர், நரிக்கல்பட்டி கோரிக்கடவு கீரனூர் வரை உள்ள வாய்க்கால்கள், தடுப்பணைகளை நிரப்ப திறந்து விட்டுஉள்ளனர். இதனால் சண்முகநதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கரையோரங்களில் உள்ள மக்கள் மேடான பகுதிக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ள அபாயம் இல்லை : பொதுபணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "பாலாறு- - பொருந்தலாறு அணையில் நேற்றைய நீர்மட்டம் 50அடியாக (மொத்தம் 65) உள்ளது. இதனால் சண்முக நதிவழியாக 800 கனஅடி தண்ணீரை அப்படியே 10 கி.மீ., துாரம் வரையுள்ள குளங்கள், தடுப்பணைக்கு திருப்பி விடுகிறோம். கரையோரங்களில் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு உள்ளதால் வெள்ள அபாயம் இல்லை," என்றார்.

**தமிழகத்தில் ஆழ்கடல் மீன் பிடிப்பு அடுத்த ஆண்டு ஆக,ல் துவக்க வாய்ப்பு : : மீன் வளத்துறை கூடுதல் இயக்குனர் தகவல்**

ராமநாதபுரம்: "தமிழகத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்பு தொழில் ஆக., மாதத்தில் துவக்க வாய்ப்புள்ளது. அதற்கான கப்பல் தயாரிப்புக்கு, ஐ.ஐ,டி., ஆராய்ச்சியாளர்கள் ஒப்புதலுக்காக
காத்திருக்கின்றனர். ஒப்புதல் அளித்தவுடன் கொச்சியில் கப்பல் தயாரிப்பு பணிகள் துவக்கப்படும்.", என மீன் வளத்துறை கூடுதல் இயக்குனர் சமீரன் தெரிவித்தார்.
தமிழகத்தில் ராமேஸ்வரம் பகுதியில் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குள் செல்லும் போது மீன் வளத்திற்காக இலங்கை எல்லைக்குள் செல்கின்றனர். இதனை தவிர்க்க ஆழ்கடல் மீன் பிடிப்பு முறையை மீனவர்களுக்கு கற்றுக்கொடுத்து, ஆழ் கடல் மீன் பிடிப்பினை ஊக்குவிக்க மீன் வளத்துறை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
கப்பல் வடிவமைப்பு: 300 கடல் மைல் தொலைவில் ஆழ்கடலுக்குள் சென்று 45 நாட்கள வரை தங்கி மீன் பிடிக்கவுள்ளதால், இதற்காக அமைக்கப்படும் கப்பலின் தரம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த கப்பல் மொத்த நீளம் 22.5 மீட்டர் (72 அடி), அகலம் 6.4மீட்டர் ஆகும். இது மணிக்கு 8 முதல் 10 நாட்டிக்கல் மைல் வேகத்தில் செல்லும். இதன் மொத்த எடை 50 டன்னுக்குள் இருக்கும். இதன் தொழில் நுட்பம் குறித்து மீனவர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு, அதற்கேற்றார் போல் அமைக்கப்படவுள்ளது.

22 பேர் விருப்பம்: 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் இக் கப்பலை வாங்க 22 மீனவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். இதில் மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 20 சதவீதம்,
மானியம் வழங்குகிறது. வங்கி கடன் 20 சதவீதம்,10 சதவீதம் மீனவர்களின் முதலீட்டு தொகையாக இருக்கும்

மீனவர்களுக்கு பயிற்சி: ஆழ்கடல் மீன் பிடிப்பு குறித்து ராமநாதபுரம், துாத்துக்குடி மீனவர்கள்
ஏழு குழுவிற்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 14 நாட்கள் பயிற்சியில் கடலின் ஆழம், சிக்னல், சர்வதேச கடல் எல்லை, எந்த பகுதியில் மீன்கள் அறுவடை கிடைக்கும், என்பது போன்ற

பயிற்சிகள் சென்னை, மும்பை ஆழ்கடலில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மீன் வளத்துறை கூடுதல் இயக்குனர் சமீரன் தெரிவித்ததாவது: கப்பலின் உறுதித்தன்மை குறித்து தொழில் நுட்ப வல்லுனர்கள் சான்றுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒரிரு நாட்களில் கிடைத்து விடும். முத்தரப்பு ஒப்பந்தம் போடப்படும்.அதன் பின்பு கப்பல்கள் கொச்சின் கப்பல் கட்டும் தளத்தில் பணிகள் துவக்கப்படும். அதிலிருந்து 9 மாதங்கள் காலக்கெடு வழங்கப்படுகிறது. அதற்கு முன்பாகவே பணிகள் நிறைவு பெறும். அடுத்த ஆண்டு ஆக., இரண்டாவது வாரத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்பு துவக்க வாய்ப்புள்ளது, என அவர் தெரிவித்தார்.

## தமிழகம், கேரளாவில் இன்றும் மழை கொட்டும்



**சென்னை:** தமிழகம் மற்றும் கேரளாவில் இன்றும்(டிச.,01) கனமழை கொட்டும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வு மண்டலம் தீவிர புயலாக மாறியதால், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, கடலூர் மாவட்டங்களில், மிக கன மழை பெய்து

வருகிறது. இன்றும், ராமநாதபுரம் மாவட்டம் உட்பட பல மாவட்டங்களில், மிக கன மழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் சில இடங்களில், கன மழை பெய்யலாம் என, கூறப்பட்டுள்ளது.

கேரளாவில், திருவனந்தபுரம், ஆலப்புழை, கோட்டயம், இடுக்கி, பத்தனந்திட்டா மாவட்டங்களுக்கு புயல் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இந்த புயல், லட்சத்தீவில் மையம் கொண்ட பின் கடலிலேயே வலுவிழக்கும். ஆனால், 'கடல் சூழல் சாதகமாக இருந்தால், வட கிழக்காக கோவா, மும்பை கடற்கரை நோக்கி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக நகரும்' என, அமெரிக்காவின் சர்வதேச புயல் எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

## 25 ஆண்டுகளுக்கு பிறகு நெல்லையில் கனமழை : ஒரே நாளில் பாபநாசம் அணை 14 அடி உயர்வு




திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்தில் நேற்று பெய்த மழையினால், பெரிய அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. இருப்பினும் அதிகாரிகள் பீதியால் தாமிரபரணியில் தண்ணீரை திறந்து வீணடிக்கின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில்

நேற்று விடிய விடிய மழை பெய்தது. இதனால் நேற்று நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில்

பள்ளி, கல்லூரிகளுக்குவிடுமுறை விடப்பட்டது. நெல்லை பல்கலைக்கழக தேர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டன. நேற்று முன்தினம் காலையில் 104.45 அடியாக இருந்த பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 118.60 அடியாக உயர்ந்தது. நேற்று மதியம் க:00 மணிக்கு அணைக்கு 30 ஆயிரம் கனஅடிவீதம் தண்ணீர் வரத்து இருந்தது. அணைப்பகுதியில் 282 மி.மீ., மழை பெய்தது. அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. இதேபோல, மணிமுத்தாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதியிலும் 281 மி.மீ., மழை பதிவானது. அணைக்கு 15 ஆயிரத்து 161 கனஅடி வீதம் நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 10 அடி உயர்ந்து நேற்று 97.90 அடியாக உயர்ந்தது. விரைவில் மணிமுத்தாறு 100 அடியாகும் வாய்ப்புள்ளது. சேர்வலாறு அணைக்கு வினாடிக்கு 7 ஆயிரத்து 837 கனஅடிவீதம் தண்ணீர் வரத்து இருந்தது.

156 அடி உயரம் கொண்ட சேர்வலாறு அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 147.89 அடியானது.

அதற்கு மேல் தண்ணீர் தேக்கிவைக்க முடியாத நிலையில், பாதுகாப்பு கருதி அணையில் இருந்து 10 ஆயிரம் கனஅடி நீர் தாமிரபரணியில் வெளியேற்றப்படுகிறது. நெல்லை மாவட்டத்தில் கடந்த 25 ஆண்டுகளில் இல்லாதபடி நேற்று ஒரே நாளில் அதிகமழை பெய்துள்ளது. 1992ம் ஆண்டு புயல் காரணமாக 1290 மி.மீ., மழை பெய்துள்ளது.

நேற்று 920 மி.மீ.,மழை பெய்துள்ளது.

கடனாநதி அணை நிரம்பி வழிகிறது:

நெல்லை மாவட்டம் ஆழ்வார்குறிச்சி அருகே உள்ள 85 அடி உயர கடனாநதி அணை நிரம்பியதை அடுத்து அணைக்கு வரும் 8 ஆயிரம் கனஅடி நீர் கருணை ஆற்றில் திறந்து விடப்படுகிறது.இந்த நீரும் சேர்ந்துகொள்வதால் தாமிரபரணி ஆற்றில் 20 ஆயிரம் கனஅடி நீர் வீணாக செல்கிறது.

அணை திறப்பு இல்லை: மலைப்பகுதியில் பெய்த மழையால் மணிமுத்தாறு அருவியில் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் அருவிக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

பருவ மழை நீடித்து வருவதால் மாவட்டத்திலுள்ள அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவது குறித்து விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மணிமுத்தாறு அணையில் இருந்து பெருங்கால் பாசனத்திற்கு நேற்று அணை நீர்


திறந்துவிட முதல்வர் பழனிசாமி உத்தரவிட்டிருந்தார். தொடர்மழையினால் அணை திறக்கப்படவில்லை.

அருவிகளில் வெள்ளம்: பலத்த மழையினால் குற்றாலத்தில் மெயின்அருவி,

ஐந்தருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. எப்போதாவதுதான் வெள்ளப்பெருக்கு ஏற்படும் பழைய குற்றாலத்திலும் நேற்று வெள்ளப்பெருக்கு காரணமாக பயணிகள் நடந்து
செல்லும் படிகள் வழியாக தண்ணீர் கொட்டியது.

தினமணி

## மேட்டூர் அணையிலிருந்து கால்வாய் பாசனத்துக்கு நீர் திறப்பு5 நாள்களுக்கு நீட்டிப்பு



மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய்ப் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது மேலும் 5 நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணை கால்வாய்ப் பாசனம் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1ஆம் தேதிமுதல் டிசம்பர் 15 ஆம் தேதி வரை 137 நாள்களுக்கு கால்வாய்ப் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். நடப்பு ஆண்டில் அணையின் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாத காரணத்தால் ஆகஸ்ட் 1ஆம் தேதி கால்வாய்ப் பாசனத்துக்கு

தண்ணீர் திறக்கப்படவில்லை. தாமதமாக நவம்பர் 17ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. நீர் இருப்பை கருத்தில்கொண்டு நவம்பர் 30ஆம் தேதிவரை தண்ணீர் திறக்கப்படும்; அதன்பிறகு 15 நாள் கழித்து மீண்டும் தண்ணீர் திறக்கப்படும் எனக் கூறப்பட்டது. இந்நிலையில், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தண்ணீர் திறப்பு மேலும் 5 நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டெல்டா பாசனத்துக்கு நீர் குறைப்பு: காவிரி டெல்டா மாவட்டங்களில் புயல் காரணமாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் திறக்கப்பட்டு வந்த நீரின் அளவு வியாழக்கிழமை காலை நொடிக்கு 2 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 1,403 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையிலிருந்து கால்வாய்ப் பாசனத்துக்கு நொடிக்கு 900 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 75.99 அடியாக உள்ளது. அணையின் நீர் இருப்பு 38.07 டி.எம்.சி.யாகும்.

## பிபிடிக்கு மாற்றாக 'எம்.ஜி.ஆர். 100' நெல் ரகம்




தஞ்சாவூரில் புதன்கிழமை (நவ.29) நடைபெற்ற எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் எம்.ஜி.ஆர். 100 என்ற நெல் ரகத்தை தமிழக முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி அறிமுகம் செய்து வைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட 'எம்.ஜி.ஆர். 100'

என்ற புதிய நெல் ரகம் 'பி.பி.டி. 5204' மற்றும் 'கோ (ஆர்) 50' என்ற ரகங்களை ஒட்டுசேர்த்து, அதன் சந்ததியில் இருந்து உருவாக்கப்பட்டது. இந்த ரகம் 130 முதல் 135 நாள்கள் வயது கொண்டது.

இதுகுறித்து ஆடுதுறை நெல் ஆய்வு மைய இயக்குநர் வெ. ரவி தெரிவித்தது:

தமிழகத்தில் நெல் சாகுபடி செய்யப்படும் 20 லட்சம் ஹெக்டேரில் சுமார் 10 லட்சம் ஹெக்டேர் மத்திய கால நெல் ரகங்களே பயிரிடப்படுகிறது. அதிலும், மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி மற்றும் பிபிடி 5204 போன்ற மத்திய கால ரகங்கள் சிறந்த சமையல் பண்புகளுக்காக விவசாயிகளால் அதிக அளவில் விரும்பி பயிரிடப்படுகிறது. ஆனால், பூச்சி, நோய் தாக்குதலுக்கு உட்படுகிறது. எனவே, இதற்கு மாற்றாக எம்.ஜி.ஆர். 100 என்ற புதிய ரகம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆய்வு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட 3 ஆண்டு கால ஆய்வில் சராசரியாக ஹெக்டேருக்கு 6,879 கிலோ மகசூல் கிடைப்பது கண்டறியப்பட்டது.

அகில இந்திய ஒருங்கிணைந்த நெல் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காரீப் பருவம் 2015-ல் ஐ.ஈ.டி. 25487 என்ற பெயரில் மத்திய சன்ன ஆரம்பக் கட்ட ஆய்வுத் திடலில் பரிசோதிக்கப்பட்டது. இதில், எம்.ஜி.ஆர். 100 நெல் ரகம் ஹெக்டேருக்கு 6,885 கிலோ மகசூல் தந்தது. இது, தேசிய அளவிலான ஒப்பீட்டு ரகங்களான டபிள்யூ.ஜி.எல். 14 ரகத்தை விட 11.47 சதவீதமும், பிபிடி 5204 ரகத்தை விட 33.78 சதவீதமும் மற்றும் மண்டல அளவிலான ஒப்பீட்டு ரகமான ஆடுதுறை 49-ஐ விட 91.19 சதமும் கூடுதல்.

எம்.ஜி.ஆர். 100 நெல் ரகம் தமிழகத்தில் 2013 - 14 மற்றும் 2014 - 15 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 21 மாவட்டங்களில் 158 இடங்களில் அணுசரணை ஆய்வுத் திடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதில், 24 இடங்களில் ஹெக்டேருக்கு 7,000 கிலோவுக்கு மேல் கூடுதல் மகசூல் தரக்கூடியது எனக் கண்டறியப்பட்டது.

கடந்த 6 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த ஆய்வுகளின்படி சராசரியாக ஹெக்டேருக்கு 6,191 கிலோ மகசூல் தந்தது. இது, புகையான், தத்துப்பூச்சி, குலை நோய், இலையுறை அழுகல் நோய், பழுப்பு புள்ளி நோய், இலையுறை கருகல் நோய் ஆகியவற்றுக்கு மிதமான எதிர்ப்புத் திறனுடையது. சன்ன அரிசியை உடைய இந்த ரகம் அதிக அரைவைத் திறனும், முழு அரிசி காணும் திறனும் கொண்டது என்றார் ரவி.

தி இந்து
தமிழால் இணைவோம்

# தென் மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யும்: சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு



குமரி கடல் பகுதியில் உருவாகியுள்ள 'ஒக்கி' புயலால் தென் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று மிக கனமழை பெய்யும். தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் 29-ம் தேதி நிலவிவந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் 30-ம் தேதி (நேற்று) அதிகாலை தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. இது புயலாக மேலும் வலுவடைந்து, காலை 8.30 மணி அளவில் கன்னியாகுமரியில் இருந்து சுமார் 70 கி.மீ. தூரத்தில் குமரி கடல் பகுதியில் நிலைகொண்டுள்ளது. இந்தப் புயலுக்கு 'ஒக்கி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்பெயர் வங்கதேசம் வழங்கியுள்ளதாகும்.

‘ஒக்கி’ புயல் வடமேற்கு திசையில் நகர்ந்து, லட்சத்தீவு நோக்கி நகரக்கூடும். அதன் காரணமாக, அடுத்து வரும் 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும். தேனி, திண்டுக்கல், கோவை, நீலகிரி, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அவ்வப்போது இடைவெளிவிட்டு சிலமுறை மழை பெய்யக்கூடும்.

**மீனவர்களுக்கு எச்சரிக்கை**

கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் மணிக்கு 65 முதல் 75 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். கடல் சீற்றத்துடன் காணப்படும். அதனால், இந்த மாவட்டங்களின் மீனவர்கள் அடுத்த 24 மணி நேரத்துக்கு கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

30-ம் தேதி காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக புதுச்சேரி, தஞ்சை மாவட்டம் வல்லம், குமரி மாவட்டம் தக்கலையில் 7 செ.மீ. மழை பதிவானது. கன்னியாகுமரி, அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம், சென்னை விமான நிலையம், நுங்கம்பாக்கத்தில் 6 செ.மீ. மழையும், தஞ்சாவூர், குமரி மாவட்டம் மயிலாடி, நெல்லை மாவட்டம் ராதாபுரம், நாகை மாவட்டம் மயிலாடுதுறை, சென்னை தரமணியில் தலா 5 செ.மீ. மழையும் பதிவானது.

இவ்வாறு அவர் கூறினார்.

**3-ம் எண் எச்சரிக்கை கூண்டு**

‘ஒக்கி’ புயல் உருவானதைத் தொடர்ந்து, தென் மாவட்டங்களில் உள்ள பாம்பன், தூத்துக்குடி, ராமேசுவரம், குளச்சல் ஆகிய துறைமுகங்களில் 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. சென்னை, எண்ணூர், கடலூர், புதுச்சேரி, நாகப்பட்டினம் துறைமுகங்களில் 2-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

தினகரன்

## குற்றாலத்தில் தொடர் மழை : அருவிகளில் கரை புரண்டு ஓடிய வெள்ளம்




தென்காசி: தென்காசி, குற்றாலம் பகுதியில் கடந்த சில தினங்களாக இரவு நேரங்களில் மழை பெய்து வந்தது. குமரி அருகே உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக நேற்று அதிகாலை முதல் கனமழை பெய்தது. கடந்த ஓராண்டில் இல்லாத அளவிற்கு நேற்று மழையின் அளவு அதிகமாக இருந்தது. மதியம் வரை இடைவெளி இல்லாமல் மழை கொட்டியது. தொடர்மழை காரணமாக நேற்று காலை முதல் அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. மெயினருவியில் பாதுகாப்பு வளைவை தாண்டி தடாகத்தின் மீது தண்ணீர் கொட்டியது. பழைய குற்றாலத்தில் படிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. இதனால் அருவிக்கு அருகில் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. ஐந்தருவியில் ஐந்து பிரிவுகளில் சில பிரிவுகள் ஒன்றாக இணைந்து தண்ணீர் கொட்டியது.

தண்ணீரின் நிறம் கலங்கலாக மாறத்துவங்கியதும் போலீசார் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் குளிக்க தடை விதித்தனர். அனைத்து அருவிகளிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டதால், வெளியூர்களில் இருந்து வந்திருந்த சுற்றுலா பயணிகளும், ஐயப்ப பக்தர்களும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். குற்றாலம் கல்லூரி அருகே குடிநீர் வடிகால் வாரிய நீரேற்று நிலையத்தில் இருந்த மரம் முறிந்து சாலையின் குறுக்கே விழுந்தது. இதனால் அவ்வழியாக போக்குவரத்து தடைபட்டது. வாகனங்கள் ராமாலயம் காலனி வழியாக திருப்பி விடப்பட்டது.

தகவலறிந்ததும் தீயணைப்பு, மின்வாரியம், காவல்துறையினர் விரைந்து வந்து மரத்தை அப்புறப்படுத்தினர். குற்றாலம் மெயினருவியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு சன்னதி பஜார் பகுதியில் உள்ள தற்காலிக கடைகளுக்குள் புகுந்தது. இதனையடுத்து மணல் மூட்டைகளை அடுக்கி தண்ணீரை ஆற்றுக்குள் திருப்பி விட்டனர்.

ஐந்தருவி செல்லும் வழியில் சிங்கவாய் பங்களா அருகில், முறிந்து விழுந்த மரம், உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டது. சிற்றாற்றில் பல மாதங்களுக்கு பிறகு நேற்று தண்ணீர் கரை புரண்டு ஓடியது. ஆய்க்குடி உச்சிபிள்ளையார் கோயில் தெருவில் டிரைவர் வெங்கடேசன் என்பவருக்கு சொந்தமான வீடு இடிந்து விழுந்தது. மேலும் ஆய்க்குடியில் இருந்து சாம்பவர்வடகரை செல்லும் சாலையில் 3 மரங்கள் முறிந்து விழுந்தன. இதனால் சிறிது நேரம் போக்குவரத்து மாற்றி விடப்பட்டது. பின்னர் மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டதும் போக்குவரத்து சீரானது.

## தமிழகத்தில் அதிகபட்சமாக நெல்லை பாபநாசத்தில்45 செ.மீ. மழை பதிவு

நெல்லை: தமிழகத்தில் அதிகபட்சமாக நெல்லை பாபநாசத்தில் 45 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. மணிமுத்தாறில் 37 செ.மீ. மழையும், கன்னியாகுமரியில் அதிகபட்சமாக கொட்டாரத்தில் 22 செ.மீ, மயிலாடி, புத்தன் அணையில் தலா 18 செ.மீ. மழை பதிவாகியுளளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## கடனா நதி அணை நிரம்பியது :8 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றம்



கடையம்: தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக கடையம் அருகே கடனாநதி அணை நிரம்பியது. இதையடுத்து அணையில் இருந்து 8 ஆயிரம் கன அடி தண்ணீர் உபரி நீராக வெளியேற்றப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை தொடங்கியதை தொடர்ந்து தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வந்தது. இந்நிலையில் வங்க கடலில் உருவான ஒகி புயல் சின்னம் காரணமாக நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் விடிய விடிய மழை பெய்து வருகிறது. இதில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலும் மழையின் அளவு அதிகரித்ததையடுத்து அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து உயர்ந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை நிலவரப்படி 85 அடி கொள்ளளவு கொண்ட கடனா அணையின் நீர்மட்டம் 83 அடியாக இருந்தது.

தொடர்ந்து பெய்த நீர்வரத்தால் கடனா நேற்று காலையில் 84 அடியாக உயர்ந்தது. அணைக்கு சுமார் 1000 கன அடி நீர் வரத்து இருந்ததையடுத்து அணையிலிருந்து காலை 6.30 மணியளவில் ஆயிரம் கன அடி நீர் உபரிநீராக திறந்து விடப்பட்டது. இதையடுத்து கடனாநதி கரையோர கிராமங்களுக்கு வருவாய்த்துறை மற்றும் உள்ளாட்சித் துறையினர் மூலம் எச்சரிக்கை விடப்பட்டது. தொடர்ந்து நீர்ப்பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்து நீர்வரத்து அதிகரித்தது. இதையடுத்து அணையிலிருந்து காலை 9 மணியளவில் வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு 8 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது. இதனால் கடனாநதியில் கட்டுக்கடங்காத வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

2016ம் ஆண்டு ஜனவரிக்குப் பின் முழுக்கொள்ளளவை எட்டியதையடுத்து கடனாநதி அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. மேலும் அணையிலிருந்து 2014ம் ஆண்டிற்கு பின் 8 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது குறிப்பிடத்தக்கது. இதே போல், ராமநதி அணையில் நேற்று காலை 6 மணி நிலவரப்படி நீர்மட்டம் 67.50 அடியாகவும் அணைக்கு நீர்வரத்து 83 கன அடியாகவும் இருந்தது. மழை அளவு 20 மி.மீட்டராகவும் இருந்தது. இதையடுத்து அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததையடுத்து மாலை 4 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 74 அடியாகவும் நீர்வரத்து 450 கன அடியாகவும் இருந்தது. 84 அடி கொள்ளளவு கொண்ட ராமநதி அணை இரவுக்குள் முழுக் கொள்ளளவை எட்டும் நிலை உள்ளது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

சேலம் : மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 1,403 கன அடியில் இருந்து 2,626 கன அடியாக அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம்- 76.01 அடி, நீர் இருப்பு- 38.09 டி.எம்.சியாக உள்ளது.

டெல்டாவுக்கு 500 கன அடி, கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 650 கன அடி நீர் திறக்கப்பட்டது.